# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

முன்னிலை: திரு ஜெ.ஆன்ஸ் ராஜா பி.ஏ, பி.எல்.,

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்

2025 ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 01-ஆம் நாள், வெள்ளிக்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2056 ஸ்ரீவிசுவாவசு வருடம் ஆடி மாதம் 16-ம் நாள் வெள்ளிக்கிழமை

இ.ம.எண்.06/2025 இன் அ.வ.எண்.202/2016

துரைசிங்கம் ...மனுதாரர்/வாதி

/ எதிர்/

1) ஞானசிரோன்மணி

2) வேலம்மாள் ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது இந்நீதிமன்றம் முன்பாக 14.07.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.வெங்கடேசன் அவர்கள் ஆஜராகியும், 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S. ராஜா அவர்கள் ஆஜராகியும், 1 வது எதிர்மனுதாரர் காலம்சென்றுவிட்ட நிலையிலும், இருதரப்பு வாதஉரை ஆகியவைகளை பரிசீலனை செய்து இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கும்,

## உத்தரவு

மனுதாரரால் இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17 ன்கீழ் மனுவில் கண்ட சீர்திருத்த விவரப்படி வழக்குரையில் சீர்திருத்தம் செய்ய அனுமதிக்க கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.08.01 17:23:56 +0530

1) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:-

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி. தபசில் சொத்தான வீடு மனுதாரருக்கு பாத்தியப்பட்டது. அது முடுக்கிற்கு மேல்பக்கம் உள்ளது. அதுபோல் முடுக்கிற்கு கிழக்கு பக்கம் எதிர்மனுதாரரின் வீடு உள்ளது. மேலும், மேற்படி முடுக்கு தென்வடலாக உள்ளது. ஆனால் வழக்குரையில் எல்கையானது தவறுதலாக காட்டப்பட்டுள்ளது. வழக்குரை தயார் செய்யும்போது மனுதாரர் வயது முதிர்வு மற்றும் படிப்பறிவு இல்லாத காரணத்தினால் மனுதாரர் வழக்கறிஞரிடம் எல்கை விவரம் தவறாக கூறிவிட்டார். அதனால் எல்கை விவரம் குறித்து வழக்குரையில் சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. மேற்படி தவறு வேண்டும் என்றோ மனப்பூர்வமாகவோ ஏற்பட்டதல்ல. மேற்படி உத்தேச திருத்தத்தினால் அசல் வழக்கின் தன்மை மாறக்கூடியதல்ல என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்சாற்றுரையின் சுருக்கம்:-

மனுதாரரின் மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. மனு தபசிலில் கூறியுள்ளது போல் தபசில் சொத்திற்கோ அல்லது வீட்டிற்கோ தொட்டடுத்து வடக்கு பக்கம் எந்த முடுக்கும் இல்லை. மனுதாரர் தான் குறுக்கு விசாரணையில் ஒப்புக் கொண்ட சாட்சியத்தை நீக்குவதற்காக வேண்டி மேற்படி சீர்திருத்த மனுவை தாக்கல் செய்துள்ளார். மேலும் மனுதாரர் / வாதி தாக்கல் செய்துள்ள மேற்படி சீர்திருத்தம் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 17 ன் நியதிக்கு எதிரானது. மேலும் மனுதாரர் குறுக்கு விசாரணையில் தனக்கு எழுத படிக்க, கையொப்பம் செய்ய தெரியும் என்று கூறிவிட்டு மனுவில் தனக்கு படிப்பறிவு இல்லாத காரணத்தினால் எல்கை விவரத்தை வழக்கில் தவறாக கூறிவிட்டதாக

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.08.01 17:24:04 +0530

காரணம் கூறுவது ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல. மேலும், மனுதாரரின் மனுவானது தனது சாட்சியத்தில் உள்ள இடைவெளியை அடைப்பதற்காக 'Fill up the lacuna' வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, இம்மனு நிலைக்கத்தக்கது அல்ல. எனவே, இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**<u>இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?</u>**

3) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. மனு மற்றும் எதிருரை பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் தரப்பில், தபசில் சொத்தான வீடு மனுதாரருக்கு பாத்தியப்பட்டது. அது முடுக்கிற்கு மேல்பக்கம் உள்ளது. அதுபோல் முடுக்கிற்கு கிழக்கு பக்கம் எதிர்மனுதாரரின் வீடு உள்ளது. மேலும், மேற்படி முடுக்கு தென்வடலாக உள்ளது. ஆனால் வழக்குரையில் எல்கையானது தவறுதலாக காட்டப்பட்டுள்ளது. வழக்குரை தயார் செய்யும்போது மனுதாரர் வயது முதிர்வு மற்றும் படிப்பறிவு இல்லாத காரணத்தினால் மனுதாரர் வழக்கறிஞரிடம் எல்கை விவரம் தவறாக கூறிவிட்டார். அதனால் எல்கை விவரம் குறித்து வழக்குரையில் சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என கூறியுள்ளார்.

மேலும், மனுதாரரால் கூறப்படும் திருத்தத்தால் இவ்வழக்கின் தன்மை எவ்விதத்திலும் மாறபோவதில்லை. மேலும், தரப்பினர்களுக்கிடையே பல்வேறு வழக்குகள் இது தொடர்பாக எழாமல் தடுக்கவும் மற்றும் நீதியின் நலனை கருத்தில் கொண்டும் இம்மனுவானது அனுமதிக்கப்படதக்கது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

இறுதியாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.08.01 17:24:12 +0530

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 01-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

JAYANDRAN ANNSRAJA Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2025.08.01 17:24:17 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>: இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>-இல்லை

JAYANDRAN ANNSRAJA Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2025.08.01 17:24:21 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.

முமா.உ.நீதிமன்றம்,வள்ளியூர்,

வரைவு, சீரான உத்தரவு

இ.ம.எண்.06/2025 இன்

அ.வ.எண்.202/2016

தேதி.01.08.2025